பக்கங்கள் 8 விலை சதம் 40 ★

ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 மாசி 27 ரபி அவ் 1 சிதம் 29
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-3-78

சன்சயின் சோப்
ஈழம் எங்கும் விற்பனையாகிறது
இது ஓர் லாலாதயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

குமாரசாமி காலமானார்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் முதுபெரும் உறுப்பினரும் முன்னாள் உதவி அமைச்சரும் முன்னாள் சாவகச்சேரி எம். பியுமான திரு. வி. குமாரசாமி கொழும்பில் நேற்றுக் காலமானார்.

குருநாகலில் உள்ள தமது பண்ணைக்குச் சென்ற சமயம் மாரடைப்பு ஏற்பட்டதை அடுத்து அவர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மரணமானார்.

"யூ. என். பி. வாலிபமுன்னணி தலைவரும் வீட்டை தாக்கினர்

சுதந்திரகட்சி உதவி அமைச்சரின் சகோதரர் குண்டர்களை ராணுவத்திடமிருந்து விடுவித்தார்

பேராதனை விரிவுரையாளர் டாக்டர் நரேந்திரன் சாட்சியம்

(நமது நிருபர் கா. யோகநாதன்)

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக்கட்சி போயகம பகுதி வாலிப முன்னணித் தலைவர் ஜெயசிங்கா, என்வீடுகளைத்தாக்கி கொள்ளையடித்தவர்களில் ஒருவரா வர். தேர்தலைத் தொடர்ந்துநடந்த கலவரத்திலும் இவர் தீவிரமாக ஈடுபட்டதை அறிவேன்.

12 குண்டர்களை இராணுவத்தினர் கைதுசெய்தபோது முன்னாள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, உதவி விவசாய அமைச்சர் எச். என். நவரத்தினவின் சகோதரர் தலையிட்டதால் அவர்கள் எச்சரித்து விடுதலைசெய்யப்பட்டனர்.

நான் பொலிசாருடனும் இராணுத்தினருடனும் தேடியபோது பேராதனை பொலிஸ் கான்ஸ்டபிள் வீடொன்று உட்பட அப்பகுதியின் உள்ள பல வீடுகளிலிருந்து எனது வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்களில் பல மீட்கப்பட்டன. எனக்கு ரூ 1,39,000 நஷ்டம் ஏற்பட்டுள்ளது குண்டர்கள் பௌத்த விகாரையில் கூடி திட்டமிட்டனர்.

பேராதனை பல்கலைக்கழக வளாக விரிவுரையாளர் டாக்டர் பாலசிங்கம் நரேந்திரன் சன்சோனிக் கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்

சன்சோனி கமிஷன் விசாரணை

டாக்டர் நரேந்திரன் மேலும் கூறியதாவது:

கண்டி மாவட்டத்திலுள்ள பிலிமத்தலாவவில் ஆகஸ்ட் கலவரத்தின்போது இருந்தேன் என்னுடன் குடும்பத்தினரும் இருந்தனர். என் மனைவியும் மகள் பாலமுரளியும். ஜெயதேவன் ஆகியோரும் வீட்டில் இருந்தனர். நான் வளாகத்திற்குச் சென்றுவிட்டேன்.

காலை 8-30 மணிக்கு குண்டர்கள் கத்தி கோடரியுடன் வந்து வீட்டைத் தாக்கத் தொடங்கினார்கள். என்மனைவியிடம் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு பின்கதவால் செல்லுமாறு கூறினேன்.

குண்டர்களின் தலைவன் ஜெயசிங்க என் வீட்டுக்கு அருகில் இருப்பவர். அவருக்கு எங்கள் தோட்ட பலாப்பழம் கொடுத்திருக்கிறோம். பல உதவிகள் செய்திருக்கிறோம். தம்பி முன்கதவைத்திறந்து ஜெயசிங்காவுடன் கதைக்க முற்பட்டார். குண்டர்கள் பயமுறுத்தினார்கள். தம்பிவேறுவழியின்றி பின்கதவால், 100 யார் தூரத்திலுள்ள கிராமசேவகர் வீட்டில் ஒழித்தார். தன்வீட்டில் ஒழிப்பதற்கு கிராமசேவகர் சம்மதித்திருந்தார்.

என் வீடு தாக்கி கொள்ளையடிக்கப்பட்டது இது என் மாமா வண பிதா ஜே. கனகரத்தினத்திற்கு அறிவிக்கப்பட்டது. பிலிமத்தலாவ தொழில் நுட்ப கல்லூரியில் சுவர் இருந்தார் அவர் சில மாணவர்களுடன் வந்து கிராம சேவகர் வீட்டிலிருந்த என் குடும்பத்தை காப்பாற்றினார் இதற்கிடையில். குண்டர்கள் என் வீட்டைத் தாக்கிவிட்டனர். என் குடும்பத்தை காப்பாற்றியதற்காக, குண்டர்கள் கிராம சேவகர்வீட்டிற்குசென்று பயமுறுத்தினார்கள்.

வீடு தாக்கப்பட்டது

நான் வளாகத்தில் விரிவுரை நடத்திக் கொண்டிருக்கும் போது எனதுவீடு தாக்கப்பட்டதாக 9-15 மணிக்கு அறிவிக்கப்பட்டது. நான் உரையை அரைவாசியில் நிறுத்திவிட்டு பேராதனை பொலிஸ் நிலையத்திற்கு சென்றேன். அங்கிருந்து வீட்டுக்கு எஸ். ஐ. கில்வாவுடனும் கான்ஸ்டபிள் ஒருவருடனும் வந்தேன் வழியில் சப் இன்ஸ்பெக்டர் யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் சிங்களவர்களை தாக்கியதால்தான் இங்கு இப்படி நடப்பதாக சொன்னார்.

வீடு அல்லோல கல்லோலம்

வீட்டிற்குபோனோம் குண்டர்கள் இல்லை எல்லாம் அல்லோல கல்லோலமாக இருந்தது நகை துணி துளபாடம் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது புத்தகங்கள் மட்டும் இருந்தது சம்பவத்தை பார்த்தவரான சரத் வந்தார் குணரத்தினா, பொருட்களைக்கொண்டு போனதாக சொன்னார்கள் ஆனால் பொலிஸார் உடன் நடவடிக்கை எடுக்க மறுத்துவிட்டனர். என்வீட்டிற்கு காவல் நிற்கவும் மறுத்தனர் தனிப்பட்டவருக்கு பாதுகாப்பு அளிக்க முடியாதென்றனர்.

கொள்ளையின்போது ஒரு டயறியை தவறுதலாக அங்கு விட்டுச்சென்றனர். சப்இன்ஸ்பெக்டர் அதை கைப்பற்றினார் அந்த டயரியிலிருந்து சம்பந்தப்பட்டவர் பழைய குற்றவாளி எனத்தெரிந்தது தாக்குதல் நடத்திய ஜெயசிங்கா யு

[8-ம் பக்கம் பார்க்க]

மதவாச்சி செல்ல சிங்களப் பெண் 5 ரூபா தந்தார்

சங்கீத ஆசிரியர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் ரயிலிலிருந்து என்னை குண்டர்கள் அடித்து வெளியில் வீசினார்கள். நான் தட்டுத்தடுமாறி எழுந்து சென்ற போது சிங்களப்பெண் என் கதையைக் கேட்டு மதவாச்சிக்கு போகுமாறு 5 ரூபா தந்தார்.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய சங்கீத ஆசிரியர் கந்தையா சிவப்பிள்ளை நேற்று சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: நான் அனுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு புகார் செய்யச் சென்றதும் 'கெட் அவுட்' யாழ்ப்பாணத்தில் பொலிஸாரைக் கொன்றுவிட்டு இங்கு புகார் செய்ய வந்தீரா? என்றார். நான் திரும்பி சென்றுவிட்டேன். (ஈ)

யாழ். நகரில் எழுந்த பொய் வதந்தி

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு சென்ற படகு ஒன்று கடலில் கவிழ்ந்ததாக நேற்று யாழ்நகரில் பரவிய வதந்தியில் எதுவித உண்மையும் இல்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு படகு கச்சதீவு சென்ற போது நெடுந்தீவுக் கடலில் இயந்திரக் கோளாறினால் நடுக் கடலில் நங்கூரமிட்டிருந்தது. இது பின்னர் திருத்தப்பட்டு கரை சேர்ந்தது என எமது நிருபர் அறிவித்துள்ளார்.

(கெ. இ)

7 ஆண்டுகளில் சிறிமா

19 தடவைகள் வெளிநாட்டுப் பயணம்

பேரவையில் பிரேமா விளக்கம்

(கொழும்பு)

முன்னாள் பிரதமரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பிரதமராகப் பதவி வகித்த 7 ஆண்டுகளிலும் 30 வெளிநாடுகளுக்கு 19 தடவைகள் பயணம் செய்தார்.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா நேற்று தேசிய அரசுப் பேரவையில் திருமதி பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுப் பயண விபரங்களைத் தெரிவிக்கும்போது மேற்கண்டவாறு கூறினார்.

பொல்காவலை எம் பி திரு ரஞ்சன் ஜெயக்கொடியின் கேள்வியொன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே திரு பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

திரு பிரேமதாசா தெரிவித்த பிரயாண விபரங்கள் வருமாறு:

70ம் ஆண்டு செப்டம்பர் 4 முதல் 22 வரை ஸாம்பியா, பிரான்ஸ், 3வது கூட்டுச் சேரா மாநாடு.

70ம் ஆண்டு செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 3 வரை எகிப்து நாஸரின் இறுதிச் சடங்கு.

71ம் ஆண்டு ஜனவரி 10 முதல் 23 வரை சிங்கப்பூர் மாநாடு.

71ம் ஆண்டு அக்டோபர் 10 முதல் 30 வரை அமெரிக்கா ஐ நா கூட்டம் – கனடா, பிரிட்டன்.

72ம் ஆண்டு ஜூன் 24 முதல் ஜூலை 6 வரை சீனா உத்தியோகபூர்வ விஜயம்.

73ம் ஆண்டு ஜூலை 29 முதல் ஆகஸ்ட் 20 வரை கனடா, பிரிட்டன் உத்தியோகபூர்வ விஜயம்.

73ம் ஆண்டு செப்டம்பர் 1 முதல் 10 வரை நைஜீரியா, கூட்டுச்சேரா மாநாடுகளின் 4 வது மாநாடு.

74ம் ஆண்டு ஜனவரி 22 முதல் 26 வரை இந்தியா உத்தியோகபூர்வ விஜயம்,

74-ம் ஆண்டு ஆகஸ்ட் 22 முதல் 25 வரை மாலைதீவு உத்தியோகபூர்வ விஜயம்,

74ம் ஆண்டு செப்டம்பர் 4 முதல் 24 வரை பாகிஸ்தான், மேற்கு ஜெர்மன், ருமேனியா, யூகோஸ்லாவியா உத்தியோகபூர்வவிஜயம்

74ம் ஆண்டு அக்டோபர் 27 முதல் நவம்பர் 7 வரை ஈரான் உத்தியோகபூர்வ விஜயம்.

74ம் ஆண்டு நவம்பர் 10 முதல் 16 வரை ரஷ்யா உத்தியோகபூர்வவிஜயம்.

75ம் ஆண்டு ஏப்ரல் 23 முதல் மே 28 வரை ஈராக், ஜூலைக்கா, கயானா உத்தியோகபூர்வ விஜயம்.

75 ம் ஆண்டு ஜூலை 8 முதல் 25 வரை சுவிட்சர்லாந்து, மெக்ஸிக்கோ சர்வதேச மகளிர் ஆண்டு மகாநாடு.

76 ம் ஆண்டு ஜனவரி 28 முதல் பெப்ரவரி 2 வரை பர்மா உத்தியோகபூர்வ விஜயம்.

தனிப்பட்ட விஜயம்

76 ம் ஆண்டு மார்ச் 14 முதல் ஏப்ரல் 15 வரை யூகோஸ்லாவியா தனிப்பட்ட விஜயம் மைத்திய கிழக்கு பிரான்ஸ், இந்தியா.

76 ம் ஆண்டு செப்டம்பர் 26 முதல் அக்டோபர் 14 வரை அமெரிக்கா ஐ. நா. கூட்டம் பிரிட்டன், தோர்வே.

76 ம் ஆண்டு நவம்பர் 5 முதல் 18 வரை மலேஷியா, பிலிப்பைன்ஸ், ஜப்பான்.

இடையில் குறுகிய கால வளல்ல தொகுதி உறுப்பினர் திரு. ஆர். ஜி. பெலிகம்மன, திருமதி பண்டாரநாயக்கா விஜயம் செய்யாத உலக நாடுகள் உண்டா என்ற கேள்வியை எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த திரு. பிரேமதாசா நாமும் இவ்விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் என்றும் பின்னர் மக்கள் இதுபற்றிக் கேட்கும்போது பதில் கூறவேண்டும் என்றும் கூறினார். (ம. இ)

'பயங்கரக்காட்டில் இரவு முழுவதும் இருந்தேன்'

பொறியியலாளரின் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"58-ம் ஆண்டு கலவர அனுபவம் எனக்கிருந்தது. அதனால், என் பங்களாவிற்கு குண்டர்கள் வந்ததும் நான் அருகில் உள்ளகாட்டிற்குச்சென்று விட்டேன். என் வீட்டை உடைத்து காரை நொருக்கியெரித்தும்கேட்டது. இரவு முழுவதும் பயங்கரக்காட்டில் தங்கியிருந்தேன்"

ஆகஸ்ட் கலவரத்தின் போது ராஜாங்கனையில் கடமையாற்றிய பொறியியலாளர் கந்தப்பு சண்முகம் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

கந்தப்பு சண்முகம் மேலும் கூறியதாவது: 77-ம் ஆண்டு ராஜாங்கனை நீர்ப்பாசன இலாகாவிற்குப் பொறுப்பாக இருந்தேன். எனக்குக்கீழ் 8 தமிழரும், 30 சிங்களவரும் வேலைசெய்தனர்;

ஆகஸ்ட் 17-ம் திகதி காலை மேற்பார்வைக்குச் சென்றபின் 1-30 மணிக்கு வந்தேன். என் உதவியாளர் நவரத்னவந்தார். அவரை நான் காலையில் அனுராதபுரத்திற்குச் செல்லுமாறு ஜீப்பில் அனுப்பினேன். அவர் தனாவைக்கு அப்பால்செல்ல முடியாதென திரும்பிவந்துவிட்டார்.

நான் கந்தோருடன் தொடர்புகொண்டேன் பதட்டநிலை இருப்பதாகவும் கந்தோரில் சொன்னார்கள்.

2-3 மணிக்கிடையில் பொலிஸ் பாதுகாப்புக்கேட்டோம். தம்புத்தேகமபொலிஸ் நிலையத்திற்கு சமரவிக்ரமாவை அனுப்பினேன். பொலிஸ் நிலையம் 4 மைலுக்கு அப்பால் இருந்தது.

இன்ஸ்பெக்டர் ஜோசப் வந்தார். யாழ்ப்பாணத்தில் குழப்பமென்றும், அதனால் அனுராதபுரத்திலும் குழப்பம் ஏற்பட்டதாகவும், என்கந்தோரைத் தாக்கமுயற்சிப்பதாகத் தகவல் கிடைத்ததாகவும் சொன்னார். பாதுகாப்புபற்றி கேட்டார். 2 ஜீப்பை பொலிசாருக்குத் தேவையெனக்கேட்டார் என்னிடமிருந்த 5 ஜீப்பில் 2 ஜீப்பைக் கொடுத்தேன்.

4 ஆயுதம் தாங்கிய பொலிசார் ராஜாங்கனை காம்பை பாதுகாத்தனர். பொலிஸ் நிலையத்திற்கு போன்பண்ணச் சொல்லிவிட்டு இன்ஸ்பெக்டர் சொன்னார்.

நான்பங்களாவிற்குச்சென்று கதவுகளைப் பூட்டும்படி வேலையாளுக்குச் சொன்னேன். குண்டர்கள் வந்தால் தெரிவிக்கும்படியும் சொன்னேன்.

குண்டர்களிடம் சிக்கிக்கொண்டார்

குண்டர்கள் வந்துகொண்டிருந்தனர். என்னைத் தேடிவந்த பாலேந்திரா குண்டர்களிடம் சிக்கிக்கொண்டார். எல்லாத் தமிழ் உத்தியோகத்தர்களையும், ஏற்றிவிட்டு என்னிடம் வருவதாகப் பொலிசார் சொன்னார்கள். என்பங்களாவை நோக்கி குண்டர்கள் வந்தனர். 'அபாயம்' என நினைத்துப்பின் கதவால் காட்டுக்குள் சென்றேன்;

நான் காட்டுக்குள் இரவு தங்கினேன். காலையில்பொலிஸ் ஜீப்வந்தது என் பங்களா வேலையாளிடம், ஜீப்பில் இன்ஸ்பெக்டர் ஜோசப் இருந்தால் சொல்லும்படி கூறினேன்.

எனதுகார் எரிந்தது

ஜோசப்வந்து என்னைப் பாதுகாப்புடன் அழைத்துச்சென்றார். என் ஒஸ்டின் ஏ 40 கார் எரிந்துகொண்டிருந்தது. அதன் பெறுமதி 24,000 ரூபா. என் வீடு கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. இதனால் 20,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது இதுதவிர புத்தகங்களும் எரிந்துவிட்டன.

18-ம் தேதி காலை 9 மணிக்கு இன்ஸ்பெக்டருடன் தம்புத்தேகம பொலிஸ் நிலையத்திற்குச்சென்றேன். அங்கு அறைகள் தமிழ் அகதிகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஒன்றில் பெண்களும் மற்றதில் ஆண்களும் இருந்தனர். பஸ்ஸில் பாதுகாப்புடன் அனுராதபுரம் சென்றேன்.

19-ம் திகதி கச்சேரியில் உணவுமில்லை, தண்ணீருமில்லை. ராஜாங்கனைக்கு நான் திரும்பிப்போகவில்லை. ராஜாங்கனைக்கு மீண்டும் போகும்படி அறிவித்தார்கள். நான் மறுத்துவிட்டேன்.

பொற்றொழிலாளர் குறைகள் இன்று கூடி ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

பொற்றொழிலாளரின் கஷ்டமான நிலைமைகளையும், மூலப்பொருட்களின் விலையேற்றமும், தட்டுப்பாடும் 6 வருடங்களாக அவர்களுக்கு வழங்கப்படாதுள்ள பவுண் பெர்மிட் முதலான விஷயங்களையும் அரசின்கவனத்திற்குக் கொண்டுவருவதுபற்றி யாழ். ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தனது 2வது வருடாந்தக் கூட்டத்தில் ஆலோசிக்கவுள்ளது.

மேற்படி கூட்டம் தலைவர் திரு. மு. பொன்னுச்சாமி தலைமையில் இன்று சனிக்கிழமை பிற்பகல் வண்ணை வைத்தீஸ்வரா வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக யாழ். எம் பி திரு வெ யோகேஸ்வரன் கலந்துகொள்வார்.

சங்கத்தின் கடந்தகால நடவடிக்கைகள் பற்றியும், வருங்காலத் திட்டங்கள் பற்றியும் இறக்குமதிக்கு தேவையான பணநிலை பற்றியும் சபைக்கு பலர் விளக்கி உரையாற்றவுள்ளனர்.

1970ம் ஆண்டு இச்சங்கம் 600 ரூபா முதலுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று 60,000 ரூபா முதலுடன் ஒரு ஸ்திரமான நிலையில் பொற்றொழிலாளருக்கு தேவையான ஆயுத உபகரணங்களை குறைந்தவிலையில் விநியோகித்து வருகின்றது. இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு ஓரளவாவது பொற்றொழிலாளருக்கு நிவாரணம் கிடைத்தது என்றே சொல்லவேண்டும். அத்துடன் பொதுமக்களுக்கு வேண்டிய ஆபரணங்களை கூடிய வேலைப்பாடுடனும், தரத்துடனும் செய்துகொடுத்து மேன்மேலும் சேவைசெய்யவேண்டும் என்பதே இச்சங்கத்தின் பேரவா ஆகும் என்றும் தெரிவித்துள்ளது.

ஆனாலும் கூட்டுறவு முறையில் நடத்தும் இச்சங்கத்துக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களித்து ஊக்குவித்தால்தான் தொடர்ந்தும் நலைவியாபாரம் செய்ய இயலும், இதுபற்றி அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்யவேண்டுமென்றும் நிர்வாகத்தினர் ஆலோசித்துள்ளனர். தொழிலாளரின் கூட்டுறவு முயற்சிக்கு என்றுமே கைகொடுத்து வரும் இவ்வரசாங்கம் நிச்சயமாக தமக்கு விமோசனம் அளிக்கும் என்ற நம்பிக்கையுடன் இதுபற்றி நேரடியாக மந்திரிமார்களுடன் கலந்துரையாடவும் சங்கம் எண்ணியுள்ளதாம்.

இக்கூட்டத்தில் கங்கத்தின் உறுப்பினர் அனைவரும் கலந்துகொள்ளவேண்டும் என்று சங்கச் செயலாளர் திரு. பொ. சக்திவேல் கேட்டுக்கொண்டுள்ளார். (உ

"பிரயாணிகளுக்குக் கற்கள் வீசினர்!"

ரயில் கார்ட் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் ரயில் கார்ட் இளையதம்பி தங்கவேலு சன்சோனிக்கமிஷன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஆகஸ்ட் 16 -ம் திகதி இரவு வேளைக்கு செல்ல தயாராக இருந்தேன். நள்ளிரவு ஒரு மணிக்கு ரயில் நிலையத்தில் குழப்பம் என்றார்கள். பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. நான் போகவில்லை.

மறுநாள் 17-ம் திகதி காலை 6-45 மணிக்கு நான் வேலைக்குச் சென்றேன். தலைமை கார்ட் சுப்பிரமணியம் வந்தார். ஸ்பெசல் ரயிலில் மடுவுக்கு புறப்பட்டோம். மதவாச்சிக்குப் போனதும் எண்ணெய் ரயிலில் வந்த தமிழர் தாக்கப்பட்டதாக அறிந்தோம். பொலிஸார் அங்கு நின்றனர் என்ன நடந்த தென்று கேட்டேன். யாழ்ப்பாணமெயில் ரயில் குண்டர்களால் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டதாக தகவல் கிடைத்தது.

கமிஷனர்: எப்படி தகவல்?

றேடியோ தகவல் பிரயாணிகள் மடுவுக்கு போக விரும்பினார்கள் போவது பாதுகாப்பல்ல என்று சுப்பிரமணியம் கூறினார். மடுவுக்கு போனோம் மதவாச்சியில் பிரயாணிகள் மீது கற்கள் வீசப்பட்டன. 3 பொலிஸார் நின்றனர்.

"அனுராதபுரத்திற்கு திரும்பச் சென்றதும் பிரயாணிகள் பொல்காவலை போக வேண்டும் என்றனர். நான் வீட்டிற்கு போனேன் எனது மனைவி கலக்கமடைந்திருந்தார். கவலைப்படவேண்டாம் நாங்கள் அனுராதபுரத்தை விட்டு செல்ல வில்லை என்றேன். மனைவி ஒரு சிங்களப் பெண்.

"18-ம் தேதி இராணுவத்தினர் வந்தனர் கச்சேரிக்கு சென்றோம் அங்கிருந்த போது எங்கள் வீடு கொள்ளையடிக்கப்பட்டதாக அறிந்தேன். எனது சாமான்கள் எல்லாம் போய்விட்டன. அங்கிருந்து வவுனியா சென்றோம் பின் யாழ்ப்பாணம் வந்தோம். சில சாமான்கள் மட்டும் கிடைத்தது. (உ)

இன்று பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா இன்று மாலை கல்லூரி சுப்பிரமணியம் அரங்கில் நடைபெறும்.

மேலதிக கல்விமா அதிபதி திரு டபிள்யு டி சி மகாதந்திலா பேருரை நிகழ்த்துவார் திருமதி தி மாணிக்கவாசகர் பரிசில்களை வழங்குவார். (உ)

சங்கீதசபை பரீட்சை முடிவுகள் நாளை இதழில் வெளிவரும்

வீண் விளம்பரம்

தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்கி வேலை செய்யக்கூடிய தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு நேரில் வரவும். பிள்ளையார் ஏஜன்ஸ் இல.31 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணம். 8710

திருகோணமலையில் நல்ல நிலைமையில் இயங்கும் ரக்ரர் வேலைத்தலத்திற்கு. மெக்கானிக்மார், எலெக்றிக் வெல்டர், சப்போட் வேலை தெரிந்தவர்கள், நற்சான்றுப் பத்திரங்களுடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். முகாமையாளர், சிலோன் மோட்டார் என்ஜினியேர்ஸ், 322, மத்தியவீதி, திருகோணமலை. 8680

விற்பனை அபிவிருத்தி உத்தியோகஸ்தர். விவசாய, வீட்டுப் பாவனைப்பொருட்கள் விற்பனை செய்வதற்கு ஆற்றலும், ஆர்வமும் உள்ள விற்பனை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் தேவை. அண்மையில் பெற்ற நற்சான்றிதழ்களுடன், சொந்தக் கைவெழுத்தில் விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 8713

விற்பனைக்கு

யாழ். இந்துக்கல்லூரி, காங்கேசன்துறை, கஸ்தூரியார் பிரதான வீதிகளுக்கு அருகாமையில் கிளார் வீதியில் 2½ பரப்புக்காணி 187/9-ம் இலக்கத்தைக்கொண்ட நவீன வசதிகளுடன் வீடு உடனடியாக விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு து. இரத்தினகோபால், 185/9, கிளார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 8721

பின்னுறுதிக் கட்டளையின் அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற வெற்றிவேலு ஐயம்பிள்ளை என்பவரின் மரண சாசனமில்லாத சொத்தின் விடயத்தில்,

வெற்றிவேலு ஐயம்பிள்ளை. மரணமெய்தியவர்

ஐயம்பிள்ளை கைம்பெண் நாகரத்தினம் சிவன்கோவில் வீதி, காரைநகர்.

மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரி/3335.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978-ம் ஆண்டு பங்குனி மாதம் 15 ந் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முழுமுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் கேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

ஒப்பம்:

பொ. டாக்டர்நாதன்

பதிவாளர்.

1978-ம் ஆண்டு தைமாதம் 6ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது

வரையப்பட்டது.

ஒப்பம்: வ மயில்வாகனம்

மனுதாரரின் சட்டத்தரணி.

8704

ஈழநாடு
The Eelanaadu

ஆசிரியர் பற்றுக்குறை

பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை பற்றி தேசிய அரசுப் பேரவையில் உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறியிருக்கின்றனர்.

பன்னீராயிரம் ஆசிரியர்கள் பற்றுக்குறையாக உள்ளனர் என்றும் பேரவையில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் எம். பிக்கள் பலரும் தத்தமது தொகுதிகளில் நிலவும் ஆசிரியர் பற்றுக்குறை பற்றி எடுத்துக் கூறி, கல்வி அமைச்சரின் கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு தொகுதியிலும் அநேகமாக நூற்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைப்படுகிறார்கள்.

மலையகத்தில் ஆசிரியர் பற்றுக்குறை காரணமாக பல பாடசாலைகள் மூடப்படவேண்டிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது.

பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்கும் வயது மீண்டும் ஐந்து என மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் இவ்வருடம் சுமார் மூன்று லட்சம் பிள்ளைகள் புதிதாகப் பாடசாலைகளில் சேர்ந்துள்ளனர்.

மலையகப் பாடசாலைகளில் படிப்பித்த வடக்குக் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பலர் சமீபத்தில் ஏற்பட்ட கலவரத்தின் போது சொந்த ஊருக்குத் திரும்பிச்சென்றனர். இவர்களில் பலரும் அச்சத்தினால் இன்னமும் தாம் படிப்பித்த பாடசாலைகளுக்குத் திரும்பிச்செல்லவில்லை.

இவைகளும் ஆசிரியர் பற்றுக்குறைக்குச் சில காரணங்களாகும்.

நாட்டின் நற்பிரஜைகளை உருவாக்கவேண்டியது நாட்டினதும் அரசினதும் கடமையாகும்.

எல்லாச் செல்வத்தையும் விட மிக முக்கியமானது கல்விச்செல்வமாகும்.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தலை விட ஓர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதுதான் பெரிது என்று பாடியிருக்கிறார் அமரகவி பாரதியார்.

நமது நாட்டில் இலவசக் கல்வி அளித்து இந்தப் பணியைச் செய்துவருவது பாராட்டுக்குரியது.

ஆனாலும் ஆசிரியர் பற்றுக்குறை காரணமாகப் பிள்ளைகளின் கல்வி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

இந்த வருடம் பாடசாலைகள் தொடங்கி முதலாவது தவணையும் முடிவடையப் போகிறது

பிள்ளைகள் தமது கல்வியைச் சரியாகப் பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

வசதியுள்ள பிள்ளைகள் "டியூட்டரிகளில்" சேர்ந்து தமது கல்வியைப் பெறுகிறார்கள்

பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறையை நீக்கிவிட்டால் 'டியூட்டரிகள்' கூடக் குறைந்துவிடுமென்று எதிர்பார்க்கலாம்.

ஆசிரியர்கள் ஓய்வுபெறும் வயதை ஐம்பத்தைந்திலிருந்து ஐம்பத்தெட்டாக உயர்த்தியிருப்பது வரவேற்கத்தக்கது.

இதேசமயம் ஆசிரியர்பற்றுக்குறையை நீக்குவதற்கு தனியும் தாமதிப்பது நல்லதல்ல

உயர்படிப்புப் படித்துவிட்டு வேலையின்றிப் பலர் இருக்கின்றனர்.

ஆசிரியர்களைப் புதிதாக நியமிப்பதன்மூலம் வேலையில்லாப் பிரச்னையும் குறையும் ஆசிரியர் பற்றுக்குறையும்; நீங்கும்.

கல்வி அமைச்சர் துரிதமாகச் செயல்படுவாரென எதிர்பார்ப்போம்.

வேலையிழந்த கான்ஸ்டபிள் தலைமையில் கொள்ளை

கேள்வியுற்றதாக அனுராதபுரம் ஸிகிதர் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரம் வேலைப்பகுதி கிளார்க் சின்னத்தம்பி மகேஸ்வரன் சன்சோனி கமிஷன்முன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

நான் 77 ஆகஸ்ட்டில் அனுராதபுரம் வேலைப்பகுதியில் கடமையாற்றினேன். நான் என் மனைவியுடன் விடுதியில் தங்கியிருந்தேன். ஆகஸ்ட் 16ம் தேதிகாலை 11-30மணிக்கு காரில் ஒரு சிங்களக்குடும்பத்துடன் யாழ்ப்பாணம் புறப்பட்டேன். ஒரு கலியாண வீட்டிற்குச்சென்றோம். என்னுடன் எஸ் பி விஜயசேகராவும், பாரியாரும், 2குழந்தைகளும், அவரின் சிங்களநண்பரும், இலாகா ஊழியர் எஸ் வேலுவும் வந்தோம். விஜயசேகராவின் மகள் இந்துகே சம்பத் அனுராதபுரத்தில் என் வீட்டில் தான் தங்கியிருப்பது வழக்கம். ஏனெனில் அவரது பெற்றோர் தூர இடத்தில் குடியிருக்கிறார்கள். அவர் அனுராதபுரம் பாலர் பாடசாலைக்குச் செல்வார். நான் அவரை என் சைக்கிளில் கூட்டிச் செல்வேன்.

யாழ். நோக்கி இராணுவ வாகனங்கள்

நாங்கள் வவுனியாவில் நண்பகல் சாப்பிட்டபின் புறப்பட்டோம். 2-30 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்பட்டோம். வழியில் பல இராணுவ வாகனங்கள், யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன முறிகண்டியில் 4-30 மணிக்கு காரை மறித்து நின்றோம் அப்போது அனுராதபுரத்திலிருந்து வந்த பஸ்ஒன்று அங்கு நின்றது. அதில் பொலிசார் வந்தனர். யாழ்ப்பாணத்தில் கலவரம் நடப்பதாகவும் அதனால் யாழ்ப்பாணம் செல்வதாகவும் சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் கூறினார். பிறகு மற்றொரு பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது.

சிங்கள பஸ் கண்டக்டர், யாழ்ப்பாணத்தில் கலவரம் நடப்பதாகவும், தனது டிக்கட் புத்தகத்தை பஸ் நிலையத்தில் கிழித்து விட்டதாகவும் கூறி அதனைக்காட்டினார். அந்த பஸ்ஸில் சிங்கள அரசாங்க ஊழியர் இருந்தனர். சிங்கள பெண்களும் இருந்தனர். பின் 2 லொறியில் வீட்டுத்தளபாடங்கள் வவுனியா நோக்கிச் செல்வதைக் கண்டேன். ஆனையிறவு தடை முகாமில் எங்கள் கார் சோதனையிடப்பட்டது நாங்கள் இரவு 7 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தோம்.

17:ம் தேதி, நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடந்த கலியாண வீட்டிற்குச் சிங்கள நண்பருடன் சென்றேன். பின்னேரம் கார் சேர்விஸ் செய்ய நல்லூர் சந்திக்கு சென்றோம் அப்போதுசிலபஸ்கள் இராணுவபாதுகாப்புடன் அனுராதபுரம் சென்றன. அன்று இரவு ஒரு நண்பர் வீட்டில் கந்தர்மடம் அன்னசத்திர ஒழுங்கையில் தங்கினோம்.

நயினாதீவில்

18ம் தேதி காலைகாரில்நயினாதீவுக்குச் சென்றோம். காரை குறிக்கட்டுவான் வேலைப்பகுதி கந்தோரில் விட்டுவிட்டு நண்பகல் நயினாதீவு சென்றோம். முதலில் பௌத்தகோவிலுக்கு சிங்கள நண்பரின் குடும்பத்துடன் சென்றோம். பின் வரும் போது சில கடற்படையினர் அங்கு காவல் செய்வதைக் கண்டேன்.

ஏதாவது கலவரம் நடந்ததா என்று கடற்படையினரைக் கேட்டபோது அவர்கள் இல்லை என்று கூறினார்கள். பின் பௌத்தகுருவிடம், கலவரம் நடந்ததா? என்று கேட்டேன். கலவரம் ஒன்றும் இல்லையென்று அவரும் கூறினார்.

பின் இந்துக்கோவிலுக்குச் சென்று வழிபட்டபின் ஜெட்டிக்கு திரும்பினோம். அங்குஒரு கடற்படை வள்ளத்தைக்கண்டோம். அந்த நேரம் நான்என் நண்பரின் மகனுடன் நின்றேன். நாங்கள் சிங்களத்தில் கதைத்தபோது, கடற்படை உத்தியோகத்தர் நண்பரிடம் மகனிடம் சிங்களவரா? என்று கேட்டபோது சிறுவன் 'ஆம்' எனப் பதிலளித்தான்.

யாழ்ப்பாணத்தில் சிங்களக்கள நடமாடுவது நல்லதாயிருக்குமா? என்று என்னிடம் கடற்படை உத்தியோகத்தர் ஆலோசனை கேட்டார்.

யாழ்ப்பாணத்தில் சிங்களவருக்கு எதுவுமே நடக்காது என்று நான் அவரிடம் கூறினேன். நாங்கள் எல்லாரும் 1-30மணிக்கு சாப்பிட்டுவிட்டு குறிக்கட்டுவானுக்கு வந்தோம். காரை எடுத்துக்கொண்டு, புங்குடுதீவுக்குச் சென்று நண்பர் ஒருவர் வீட்டில் சாப்பிட்டோம். பின் 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் வந்தோம்.

துர்க்காதேவி ஆலயத்தில்

19ம் தேதி துர்க்கையம்மன் கோவில் பொங்கலுக்குச் சென்றோம் தெல்லிப்பளையில் டாக்டர் கணநாதனைச் சந்தித்து அனுராதபுரம் வேலைப்பகுதி லடுதியில் ஏதாவது சப்பலம் நடந்ததா? என்றுகேட்டேன்

அவர் தனது வீடு தாக்கிக் கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாகவும், எனது விடுதிக்கு என்ன நடந்ததென்று தெரியாதென்றும் கூறினார்.

எங்கள்பிரதம ஸிகிதர்பொன்னம்பலத்தைகண்டேன். அவர் தான் முதல்முறையாக எனது விடுதி கொள்ளையடிக்கப்பட்டு விட்டதாகக்கூறினார். பின் நான் வந்து என் மனைவிக்கும் மற்றவர்களுக்கும், கொள்ளை பற்றி கூறினேன்.

பாதுகாப்பு கேட்டேன்

அன்று மாலை நான் யாழ். பொலிஸ் நிலையம் சென்று இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளையைச் சந்தித்து, அனுராதபுரம் செல்ல காருக்குப் பாதுகாப்பு தருமாறு கேட்டேன்.

அனுராதபுரம் செல்ல நாகவிதாரையில் நான் இருந்தபோது பஸ்கள் வந்து பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. அனுராதபுரத்திற்கு பஸ் புறப்பட்டது. எனது வீடு கொள்ளையடிக்கப்பட்டது பற்றி உடன் அனுராதபுரம் பொலிஸில் புகார் செய்யுமாறு கூறினேன். காலை 7-30மணிக்கு பஸ், யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது பொலிஸ் இராணுவ பாதுகாப்புடன் சென்றது.

நான் செப்டம்பர் 13ம் தேதி அனுராதபுரம் சென்றேன். எனது வீட்டில் கொள்ளையடிக்கப்பட்டபொருட்கள் ஏதாவது பொலிஸில் இருக்கிறதா? என்று அறிந்தபின் அன்றிரவு திரும்பினேன்.

பொலிஸார் ஒரு பொருட்களையும் கண்டுபிடிக்கவில்லை பின் 20ம் தேதி சென்றேன். அன்று உடனே திரும்பினேன் இருநினங்களும் அனுராதபுரம் எஸ். பியை சந்திக்க சென்றேன். முடியவில்லை இதுபற்றி இணைப்பு அதிகாரிக்கும் அறிவித்தேன்.

எஸ். பி க்கு அக்கறையில்லை

அக்டோபர் 12ம் தேதி அனுராதபுரம் சென்று எஸ். பி லியனகேயை சந்தித்தேன் அவர் அதுபற்றி அக்கறையின்றி காணப்பட்டார். குண்டர்களின் பெயர் விலாசங்களை தருமாறு கேட்டார். சிலரின் பெயர்களை கொடுத்தேன் ஆனால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

என் விடுதி அயலவர்களிடமும் சென்று விசாரித்தேன் அனுராதபுரம். விமான நிலைய வீதியை சேர்ந்த டிராக்டர் சாரதி மாதுங் தலைமையில் 100 குண்டர்கள் வந்து என் விடுதிக்கு சேதம் விளைவித்து என்னை கொல்ல முற்பட்டார்கள் என அறிந்தேன்

'பறைத் தமிழா வெளியில் வாடா'

"பறைத் தமிழா வெளியில் வாடா' என்று கத்தினார்களாம் உன்னைக் கொல்லவேண்டும், வீட்டுக்குள் ஒழிக்காதே என்று கூச்சலிட்டார்களாம் பின் என் வீடுதியை உடைத்தார்களாம் என வீட்டை உடைக்கும் போது அயலவர்கள் சிலர் நாங்கள் போய்விட்டதாக கூறினார்களாம். அயலவர்களை சத்தியம் செய்யும்படி கேட்டார்களாம் சத்தியம் செய்து சொன்னபின் தான் சென்றார்களாம்.

என் கந்தோர் ஊழியர் சிலரால் மாதுங் தூண்டப்புட்டதாக தெரிகிறது.

மனைவியைத் தாக்கக் கொன்னார்களாம்

எங்கள் தொழிற்சங்கத்தலைவர் யோகத்தரின் மனைவி திருமதி குணசேகரா, குண்டர்களிடம் எனது மனைவியை தாக்குப்படி கூறியதாகவும், அறிந்தேன்.

அன்று பின்னேரம் வேலைநிறுத்தம் செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் தலைமையில், 50 பேர் என் வீட்டுமதில் சுவரால் பாய்ந்துசென்று விடுதியில் கொள்ளையடித்ததாக அறிந்தேன். சில பொருட்கள் திருமதி குணசேகராவின் பிள்ளைகளால் கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவத்தின்பின் திருமதி குணசேகராவின் விடுதிக்கு அருகில் இலாகாவினால் ஒரு வேலி போடப்பட்டுள்ளது இது என் விடுதிக்கு போகாமல் தடுக்க போடப்பட்டது

ஆகஸ்ட் 17ம் தேதி காலை என் சைக்கிள், தையல் மெஷின் மற்றும் பெறுமதியான பொருட்கள் என்விடுதியில் இருந்தது. சில சிங்கள உத்தியோகத்தர்கள் இதனை பாதுகாப்பாக எடுத்துவைக்க விருப்பினார்கள் ஆனால் திருமதி குணசேகரா இதற்கு விடவில்லை

18ம் தேதி காலை 100 பேர் வந்து என் சைக்கிள், தையல் மெஷின் மற்றும் பொருட்களை கொண்டு சென்றனர் என் தையல்மெஷினை கொள்ளையடித்தவர் சோமசிங்கா வீட்டிற்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வசிப்பவர் என அறிகிறேன்.

'கொல்லப்படுவாய்'

எனது மேசையில் யாரோ ஆங்கிலத்தில் 'கொல்லப்படுவாய்' என எழுதி கையெழுத்திடப்பட்டிருந்தது அந்த மேசை இப்போ யாழ்ப்பாணத்தில் இருக்கிறது. எனக்கு 58,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டது. (உ)

மலைகூடத் தண்ணீரையும் சிலர் எடுத்துக் குடித்தனர்

(யாழ்ப்பாணம்)

மலைகூட சதி செய்வதற்கு தொட்டியில் நிரப்பியிருந்த தண்ணீரைக்கூடச் சிலர் தாகம் தாங்கமுடியாமல் எடுத்துக் குடித்தனர் என்று சன்சோனிக் கமிஷன் முன் நேற்று முன்தினம் சாட்சியமளித்த வட்டுக்கோட்டை இளைப்பாறிய அதிபர் நடராசா சிவஞானம் தெரிவித்தார்.

வட்டுக்கோட்டை இளைப்பாறிய அதிபர் நடராசா சிவஞானம் சன்சோனிக் கமிஷன் முன் கூறியதாவது.

என் மகளுடன் நான் அனுராதபுரத்தில் என் மருமகன் வீட்டில் தங்கியிருந்தேன். ஆகஸ்ட் 17ம் தேதி நகரத்தில் தாக்குதல் நடைபெற்றது.

நாங்கள் வீட்டிலிருந்தபோது சில்வா என்பவரும் என் மகனும் எனக்கு உதவிக்கு வந்தார்கள் அவர் என் மருமகனின் நண்பன். அப்போது கதிரேசன் கோவிலுக்கு 6 பேர் போய், பூசகரைத் தேடி அடித்தார்கள். பின் 6 பேர் எங்கள் வீட்டை நோக்கி வந்தனர்.

பெரும் அபாயம் வரப்போவதாக சில்வாவின் மகனிடம் கூறினேன், "பயப்படவேண்டாம்" என அவர் கூறினார்.

நான் றேடியோவை எடுத்துப்போய் அறைக்குள் கட்டிலுக்குகீழ் வைத்துவிட்டு நிமிர்ந்தேன். எதிரில் உள்ள கண்ணாடியில் ஒரு உருவம் தெரிந்தது. திரும்பிப்பார்த்தேன் ஒரு இளைஞர் நின்றுகொண்டிருந்தார். யாழ்ப்பாணத்தில் எல்லாச் சிங்களவரையும் கொன்று குவித்துவிட்டார்கள் உம்மை ஏன் கொல்லக்கூடாது என்று கேட்டார்.

எனக்கு சிங்களம் தெரியாது அரைகுறையாகத்தான் தெரியும்.

அவனை ஒரு கையால் இடுப்புடன் கட்டியணைத்து சிங்களவருக்கு நான் ஒரு கெடுதியும் செய்யவில்லை" என்று கூறியபடி வெளியில் அழைத்துவந்தேன்

வெளியில் சில்வாவின் மகன் அவனுடன் கதைத்தார். வெளியில் 5 பேர் நின்றுகொண்டிருந்தனர்.

என்மகன் தன் அக்காவை, திருமணம் செய்துள்ளதாக சில்வாவின் மகன் அந்நேரம் குண்டர்களிடம் விளங்கப்படுத்தினார்.

அபாயமில்லை என்பதை அறிந்துகொண்டேன் அவர்கள் கலந்துரையாடினார்கள்.

நான் வேட்டியை உரிந்தெறிந்தேன். சாரத்தைக் கட்டினேன். நாஷனலை கழட்டி எறிந்தேன். அரைக்கைச் சேட்டை மாட்டினேன். சிங்களவன்போல் உடை அணிந்து ஒரு சூட்கேசைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டேன்.

விவேகானந்த கல்லூரி குறுக்குப்பாதையால் சென்றோம். ஒரு பக்கத்தில் சில்வா மறுபக்கத்தில் சில்வாவின்மகன்

தமிழ் கடைகள் எல்லாம் உடைத்துக் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து கொள்ளையடித்த பொருட்களை கொண்டுசென்று கொண்டிருந்தனர்.

கிணற்றுக்குள் ஆட்களும் பொருளும்

பொலிஸார் 'கிரட்' புகைத்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர்

வழியில் கிணற்றுக்குள் கிரட் சாமான்களைப் போட்டுக் கொண்டிருந்தனர். தமிழரை

(7-ம் பக்கம் பார்க்க)

மனவிக்கு

தங்கள் இதயத்தை எந்த அளவுக்குப் பக்குவப்படுத்திக் கொள்கிறார்களோ, அந்த அளவுக்குத் தான் அவர்கள் வாழ்க்கையில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்.

ரூஸ்ஸோ

சன்சோனிக்கமிஷன் விசாரணை

டிராக்டரில் வந்த பொலிசாரின்

அடி அகோரத்தில் டிராக்டர் நம்பரை பார்க்கவில்லை

ப. நோ. கூ. ச. கிளார்க் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

மன்னார் விதிவழியாக டிராக்டரில் வந்த பொலிஸார் எங்கே போகிறீர்கள் என்று கேட்டு விட்டு எம்மைத் தாக்கினர் அடி அகோரத்தில் நாம் டிரக்டரின் நம்பரைப் பார்க்க வில்லை.

இவ்வாறு துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க கிளார்க் சன்சோனி கமிஷனின் சாட்சியமளிக்கையில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது

ஆகஸ்ட் 29-ம் தேதி காலை 8-30 மணிக்கு நான் வேலைக்கு போனேன். சங்கத்திலிருந்து 150 யார் தூரத்தில் டிரக்டரில் வந்த பொலிஸார் என்னை மறித்தனர். நானும் லொறி சாரதியும் சைக்கிளில் சென்றோம்.

எங்கே போகிறீர்கள் என்று கிங்களத்தில் கேட்டனர். எனக்கு கிங்களம் தெரியாது. லொறிச் சாரதி ப. நோ. கூ. சங்கத்திற்கு என்று கூறினார்.

5 பொலிஸார் இறங்கி வந்து 2 பேருக்கும் அடித்தார்கள்

அடி அகோரத்தில் டிராக்டர் நம்பரை பார்க்கவில்லை

கமிஷனர்: டிராக்டரின் நம்பர் என்ன? அடி அகோரத்தில் பார்க்க வில்லை சைக்கிளை தூக்கி அடித்து ரோட்டில் போட்டனர் பின் டிராக்டரை சைக்கிளுக்கு மேலால் ஓட்டினர்.

கமிஷனர்: எங்கிருந்து வந்தார்கள்?-மன்னாரிலிருந்து.

கமிஷனர்: மன்னாரிலிருந்தா? அந்தரோட்டு மன்னாருக்குப் போகிறது.

கமிஷனர்: எத்தனை பேர்? 40 பேர்.

கமிஷனர்: யாருக்கும் முறைப்பாடு செய்தீரா? ஐ. ஜி. ஏக்கு முறைப்பாடு செய்தோம்

கமிஷனர்: இப்பவும் அவர் தானா ஏ. ஜி. ஏ? ஆம்

கமிஷனர்: எப்போது புகார் செய்தீர்? — அதேதினம்

கமிஷனர்: எத்தனை மணிக்கு? அன்று 10 மணிக்கு

கமிஷனர்: விசாரணை நடந்ததா? இல்லை. அரசாங்க அதிபருக்கு அனுப்பியதாக ஏ. ஜி. ஏ. சொன்னார்.

கமிஷனர்: இன்னும் விசாரணை நடக்கவில்லையா? ஆம்.

கமிஷனர்: உமது புகாரின் பிரதி இருக்கிறதா? வீட்டில் இருக்கிறது.

கமிஷனர்: அதனை அனுப்பி வையுங்கள்? ஆம்

மல்லாவி கிளை மனேஜர்

மல்லாவி ப நோ கூ ச கிளை மனேஜர் சிற்றம்பலம் ரகுநாதன் கூறியதாவது: ஆகஸ்ட் 29ந்தேதி காலை 8-30 மணிக்கு நான் சாமான்களை எடுக்க துணுக்காய் சங்கத்திற்குச் சைக்கிளில் போனேன்.

40 பொலிசார் றைபிளுடன் வந்தனர்

டிராக்டரில் பொலிசார் வந்தனர். பொலிசார் வருவதாக மக்கள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். திரும்பிப் பார்த்தேன். 40 பொலிசார் றைபிளுடன் வந்தனர்.

என் வயிற்றில் றைபிளால் இடித்தனர். நான் விழுந்து விட்டேன்.

கமிஷனர்: பொலிசார் நம்பர் என்ன? நம்பர் அணியவில்லை நான் விழுந்த பின் சப்பாத்துக் கால்களால் உழக்கினார்கள். நான் அருகிலிருந்த கடைக்குள் ஓடிவிட்டேன். என் சயிக்கிளைப் போட்டுக் கம்பிகளை உடைத்தனர். ஏ ஜி ஏக்கு முறைப்பாடு செய்தேன். புகாரிப் பிரதி வீட்டில் இருக்கிறது.

கமிஷனர்: டிராக்டர் நம்பர் என்ன? பார்க்கவில்லை. டிராக்டர் 50 யார் தூரத்தில் நின்றது.

தொழிற்கந்தோர் உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம் தொழிற்கந்தோர் உத்தியோகத்தர் முத்துலிங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

ஆகஸ்ட் மாதம் அனுராதபுரத்தில் கடமையாற்றினேன். மனைவி பிள்ளைகளுடன் அங்கிருந்தேன்.

ஆகஸ்ட் 17ந் தேதி காலை என்ன நடக்கிறதென்று பார்க்க பாண்டவனுக்குச் சென்றேன்.

கமிஷனர். பாங்க் டவுனா? ஆம். பாங்கைச் சுற்றியுள்ள பகுதியை பாங் டவுன் என்பார்கள். நகரத்தில் கடைகளைத் தாக்கினார்கள். பின் நான் வீடு சென்றுவிட்டேன். உதவி ஆணையாளருடன் இதாடர்புகொண்டு தொலைபேசியில் நிலைமையை விளக்கினேன்.

வீட்டிற்குப் போய்க் கதவுகளைப் பூட்டிவிட்டு மனைவி பிள்ளைகளுடன் இருந்தேன் மத்தியானம் 200 யார் தூரத்திலுள்ள விவேகானந்த சங்கத்திற்குச் சென்றேன்.

அப்போது 100 இளம் குண்டர்கள் கொட்டன்களுடன் கதிரேசன் கோவிலுக்குச் சென்றார்கள் நான் பயந்து வீட்டிற்குச்சென்றுவிட்டேன். பின் துப்பாக்கிச் சூடு கேட்டது. கதிரேசன்கோயிலைத் தாக்கிய கோஷ்டியைப் பொலிசார் சுட்டுக் கலைத்ததாகப் பின்னர் அறிந்தேன் பின் என் வீட்டுப் பக்கம் வந்தார்கள்

அப்போது தொழிலாளி பெரேரா வந்து கடைகளைக் குண்டர்கள் உடைத்துக் கொள்ளையடிப்பதாகவும் அங்கிருப்பது பாதுகாப்பல்ல என்றும் தன் வீட்டில் வந்திருக்கும்படியும் கூறினார் நாங்கள் பெரேரா வீட்டில் போயிருந்தோம்.

அடுத்த நாள் பெரேரா வீட்டிலிருப்பதும் ஆபத்தாக இருந்தது

18ந் தேதி பொலிசுக்குப் போய்ச் சொன்னோம் 10 மணிக்கு இராணுவம் வந்தது பொலிஸ்நிலையத்திற்குச் சென்றோம் சூட்கேஸ் எடுத்துப் போனோம் அங்கிருந்து கச்சேரிக்குப் போனேன் கச்சேரியிலிருந்து வவனியா போனேன் அங்கு தங்கியிருந்தபோது வவனியாப் பொலிசார் தாக்குதல் நடத்துவதாகவும் அங்கு இருப்பது பாதுகாப்பல்ல வென்றும் அறிந்தோம் பின் ரம்பைக்குளம் காட்டில் இருந்து யாழ்ப்பாணம் வந்தோம்.

அனுராதபுரத்தில் கோவில் பூஷகர் தாக்கப்பட்டார் சிலைகள் உடைக்கப்பட்டதாகவும் அறிந்தேன் கோவிலும் உடைக்கப்பட்டது

சிதம்பரப்பிள்ளை

தெல்லிப்பளையைச் சேர்ந்த பென்சனியரான எம். எஸ். சிதம்பரப்பிள்ளை கூறியதாவது:

ஆகஸ்ட் 16ம் தேதி இரவு மெயில் ரயிலில் தெல்லிப்பளையிலிருந்து கொழும்பிற்கு சென்றேன் அனுராதபுரத்திற்கு சென்றதும், தாக்குதல் ஆரம்பமானது 7பேர் வந்து என் சேட்டைப்பிடித்து என்னைக் கட்டிச்சென்றார். 'சந்திரா ஸ்ரோன்லையும், உடைத்து கொள்ளையடித்தார்கள். ஏன் சிங்கள கடையையும் உடைக்கிறார்கள் என்றுகேட்டேன். அது சிங்கள கடையல்ல தமிழ்கடை என்று அவர் சொன்னார்.

கொள்ளைபொருட்களுடன் சிறுவர்கள்

கொள்ளைச் சாமான்களைச் சிறுவர்களும் கொண்டு சென்றார்கள். பொலிஸார் பார்த்துக்கொண்டிருந்தனர் அவர்களிடம் றைபிள் இருந்தது. பள்ளிலும்

தமிழரை தாக்கினர்

பள்களை மறித்து உள்ளே சென்று தமிழர்களை வெளியில் இழுத்து தாக்கினார்கள். சந்திரசேகராவுடன் நான் சென்றதால் எனக்கு ஒன்றும் கேட்க்கவில்லை.

17ம் தேதி காலை ரயில் நிலையத்திற்கு சென்றேன்.

கமிஷனர்: எத்தனை மணிக்கு? 10.30 மணிக்கு

கமிஷனர்: நிலைமை எப்படியிருந்தது? வழக்கம்போல அப்போது சந்திரசேகராவின் மகன் ஓடிவந்து தாத்தா இங்கு நிற்பது ஆபத்து. தமிழர்களை தேடி அடிக்கிறார்கள் என்றார் அதனால் என்னை பொலிஸ் நிலையத்திற்கு கூட்டிச் சென்றார். சந்திரசேகரா ஒரு அரசாங்க ஊழியர் அவருக்கு பொலிஸ் எல்லாரையும் தெரியும்.

பொலிஸ் நிலையத்தில் அப்போ பஸ் ஒன்று நின்றது அந்த பஸ்ஸில், கொழும்பு சென்றேன். கொழும்பில் நான் செல்லவேண்டிய கடைக்கு சென்றதும், அது எரிக்கப்பட்டிருந்தது அதனால், அகதிகள் முகாமிற்கு சென்றேன் எனக்கு 1500ரூபா நஷ்டம் ஏற்பட்டது.

(க-இ)

பஸ்ஸில் வந்த தமிழரை வெளியே இழுத்து தாக்கினர்

இழுத்து, என் பக்கட்டிலிருந்த 250ரூபாவை எடுத்தார்கள் என் சூட்கேசையும் எடுத்தார்கள். எல்லாரிடமும் கொள்ளை அடித்தார்கள். பின் ரயில் நிலையத்திலிருந்து 50யார் தூரத்திற்கு அப்பால் ரயில் நின்றது. எல்லோரும் தூக்கி வீசப்பட்டோம் நான் எழுந்து சென்றபோது சந்திரசேகரா என்பவர் என்னைப் பார்த்தார் நான் அவரிடம் எல்லாவற்றையும் சொன்னேன் அவர்

இந்தக் கிராமத்தில் தமிழர்...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

'இந்தக் கிராமத்தில் தமிழர் இருப்பது சிங்களவர்களுக்கு அவமானம்' என்று குண்டர்கள் கூறினார்கள். கிராமத்திலிருந்து எங்களை அனுப்பிவிட வேண்டுமென்றனர்,

வகலாவின் கழுத்தில் அடித்தார்கள் முன்பு அவர் சேட் அணிந்திருந்தார். திரும்ப வரும்போது பெனியன் அணிந்திருந்தார் குண்டர்கள் அவரின் சேட்டைப்பிடித்து இழுத்து கிழித்திருக்கவேண்டும்

இவர்களை பஸ்ஸில் ஏற்றி அனுராதபுரம் அனுப்பவேண்டும் என்று குண்டர்கள் கூறினார்கள் வகலா முன்னுக்குசென்றார் நாங்கள் பின்னால் காட்டுப்பாதையால் ரோட்டுக்கு சென்றோம் வழியில் எங்கள் கைக்கடிகாரங்களை பறித்தெடுத்தனர் பின் வகலாவை போகச்சொன்னார்கள் அவர் மிச்சம் கவனம், என ஆங்கிலத்தில் கூறிவிட்டுச்சென்றார்

யாழ். ரோட்டரி நடத்தும் சிறந்த நடத்துனர் தெரிவு

இன்று இலட்சோப லட்சம் மக்களின் நாளாந்த இடப் பெயர்ச்சிக்கு ஜீவநாடியாகத் திகழ்வது இலங்கைப் போக்குவரத்துச்சபை என்றால் மிகையாகாது. இலங்கை போக்குவரத்துச் சபையின் சேவை சிறப்பதற்கு உயிர்ஓட்டமாக திகழ்பவர்கள் பஸ் நடத்துநர்கள். பஸ் நடத்துநர்கள் சிறந்த முறையில் சேவை செய்தால் சபைக்கும் மக்களுக்கும் பேருதவியாக அமையும்.

பஸ் நடத்துநர்களை மக்கள் பணியில் மேலும் ஊக்கப்படுத்தி உற்சாகமளிக்கும் நோக்கமாக 'சிறந்த பஸ் நடத்துநரை' தெரிவுசெய்து அவர்களுக்கு தங்கப் பதக்கம், வெள்ளிக்கிண்ணம் போன்ற பல அரிய பரிசுகளை அளிக்க யாழ். ரோட்டரிக் கழகம் முன்வந்துள்ளது.

புதுவருடப் பரிசுப் போட்டியாக நடக்கும் இப்போட்டியில் சிறந்த முறையில் சேவை செய்யும்பஸ் நடத்துநரை தெரிவு செய்யும் உரிமையை பொதுமக்களிடமே ரோட்டரிக் கழகம் விட்டுள்ளது.

எனவே கீழ்க்காணப்படும் கூப்பனில் பொதுமக்கள் தங்களுக்கு சிறந்த முறையில் சேவைசெய்யும் பஸ் நடத்துனரின் பெயரைக் குறித்து இன்றே யாழ் ரோட்டரிக் கழகத்திற்கு தங்கள் தீர்ப்பை அறிவிக்கவேண்டும்.

இது பொதுமக்கள் தங்கள் சமுதாயத்திற்கு ஆற்றும் கடமையும்கூட மறந்துவிடாதீர்கள். முடிவுதிகதி 4-4-78.

நடத்துநரின் பெயர்.....

பதிவு இலக்கம்.....

அனுப்புபவரின் பெயர் .....

அனுப்புபவரின் விலாசம்.....

திகதி .....

ஒப்பம்

இக்கூப்பனைக் கத்தரித்து பூர்த்தி செய்து டாக்டர் பா. சோ பாரதி, 24, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பவேண்டும். கூப்பன் இன்றி அனுப்பப்படும் தெரிவுகள் நிராகரிக்கப்படும். (இ)

"அனுராதபுரம் சவச்சாலையில்

17 சடலங்களைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன்"

சுகாதார அத்தியட்சகர் தசநாயக்கா சாட்சியம்

'ஆகஸ்ட் கலவரத்தின் போது நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றினேன். நான் மறுவுக்குச் சென்று விட்டு 16ம் திகதி திரும்பினேன் 17ம் திகதி கந்தோருக்கு சென்றேன். தொலைபேசியில் என்னைப் பயமுறுத்தியதாக டாக்டர் நவரத்தினசிங்கம் தெரிவித்தார் 'சுகாதார அத்தியட்சகர் எங்கே? அவரை நாய் போல் சுட்டுத்தள்ளுவோம்' என்று தொலைபேசியில் எச்சரிக்கப்பட்டதாகக் கூறினார்' சன்சோனிக் கமிஷன் முன் சாட்சியமளித்த அனுராதபுரம் சுகாதார சேவை அத்தியட்சகர் டான்லி தசநாயக்கா மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நம்பர் அணியாத பொலிஸார்

'ஆகஸ்ட் 17ம் தேதி பொலிஸ் அதிபருக்கு ஒரு கடிதம் எழுதி அதன் பிரதி டி. ஐ. ஜிக்கும், ஜி. ஏ க்கும் அனுப்பினேன். அந்தக் கடிதத்தில், பொலிஸார் நம்பர் அணியாமல் ஆஸ்பத்திரிக்கு வந்தது பற்றி தெரிவித்தேன்.

அரசாங்க அதிபர் செயலகத்தில் அன்று காலை மாநாடு நடந்தது. நான் கந்தோருக்கு வந்ததும், ஊழியர் வேலை நிறுத்தம் செய்திருப்பதாக அறிந்தேன். வேலைசெய்யப் பயப்படுவதாக ஊழியர் சொன்னார்கள்.

நான் வைத்திய அத்தியட்சருடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். பின் கந்தோர்த் திறப்பு எடுக்கப் பொலிஸ் நிலையம் சென்றேன். பின்னர் ஆஸ்பத்திரியிலிருந்து கந்தோருக்குச் சென்றேன்.

அந்த நேரம் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தனர். ஆஸ்பத்திரிச் சவச்சாலை ஊழியர் ஒருவரைப் பொலிஸார் முதல் தினம் தாக்கியதாகக் கூறினர் ஆஸ்பத்திரியில் பொலிஸார் நம்பர் இல்லாமல் திரிவதாகவும் கூறினர்.

பொலிஸாரை அகற்றுவதாக உறுதியளித்தேன்

'ஆஸ்பத்திரியின் பெயரைக் காப்பாற்றுங்கள்; போய்வேலை செய்யுங்கள் இவ்விஷயத்தை நான் கவனிக்கிறேன்' என்று கூறிவிட்டுக் கச்சேரி மாநாட்டுக்குச் சென்றேன். ஆஸ்பத்திரியிலிருந்து பொலிஸாரை அகற்ற நடவடிக்கைஎடுப்பதாக உறுதியளித்தேன்.

மாநாட்டில் டி ஐ ஜி, எஸ் பி இருந்தனர். சுகாதார சேவைபற்றிய விஷயம் எடுக்கப்பட்டது நான் ஆஸ்பத்திரிச் சிற்றூழியர் வேலைநிறுத்தம் பற்றித் தெரிவித்தேன் சவச்சாலையில் ஊழியரைப் பொலிஸார் தாக்கியதாகவும் ஆஸ்பத்திரியில் பொலிஸார் நம்பரில்லாமல் திரிவதாகவும் கூறினேன்.

2 சடலங்களைக் காக்க ஏராளமான பொலிசார்

நான் நேரடியாகச் சென்று பார்த்தபோது சில பொலிஸார் நம்பர் இல்லாமல் இருந்ததாகவும் கூறினேன் 2 சடலங்களை காவல்காக்க ஏராளமான பொலிஸார் நிற்பதாகவும் கூறினேன்.

சன்சோனிக் கமிஷன் விசாரணை

டி. ஐ. ஜி. கேட்டார், உம்மால் பொலிஸாருக்கு ஆஸ்பத்திரியில் பாதுகாப்பு அளிக்க உறுதிகூற முடியுமா என்று.

நான் முடியாது என்றேன்; ஏன்? என்று கேட்டார்.

3 மாதத்தின்முன்பு ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு குழந்தை களவாடப்பட்டதாகக் கூறினேன்.

'இப்பிரச்னைக்கு ஒரு வழியிருக்கிறது' என்றேன்.

அது என்ன என்றார்.

முதலாவது ஆஸ்பத்திரிக்கு வரும் பொலிஸார் கடிதம் கொண்டுவரவேண்டும். இரண்டாவது நம்பர் அணிந்து வரவேண்டும். மூன்றாவது எம். எஸ்ஸிடம் அனுமதி பெற்று வரவேண்டும். நாலாவது பொலிஸார் கொண்டுவரும் கடிதத்தில், அவர் றைபிளுடனா அல்லது றைபிள் இல்லாமலா கடமைக்குச் சென்றார் எனத் தெரிவித்திருக்கவேண்டும். ஐந்தாவது பொலிஸார் எங்கு கடமைக்குச் சென்றார்களோ, அவ்விடத்தில் நிற்க வேண்டும். ஆஸ்பத்திரி எங்கும் நடமாடக்கூடாது என்றும் அனுப்பினேன். அதன்பின் 17ம் திகதி 4-30 மணிக்கு வை. எம். சி. ஏக்குப் போனேன். பின் இரவு 7 மணிக்கு ஆஸ்பத்திரிக்குத் திரும்பி வந்தேன் நிலைமை பற்றி அறிந்த பின் வை, எம். சி ஏக்குப்போனேன்

18ம் திகதி காலை 8 மணிக்கு எம். எஸ்சுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். டாக்டர் பாலச்சந்திரன் வந்து, டாக்டர் ஒருவரது அறையில் பார்சலுடன் இருப்பதாக அறிவித்தார். டிரான்ஸிஸ்டராக இருக்கும் என சந்தேகித்தார்.

